பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றது.

மேற்படி சீர்மிகு நகரத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.965 கோடியில், இம்மாநகராட்சியில் 28 திட்டப்பணிகள் ரூ.294.29 கோடி மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 47 எண்ணம் பணிகள் ரூ.615.16 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. ஏனைய 9 எண்ணம் பணிகள் ரூ.46.18 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பல்வேறு நிலைகளில் நடவடிக்கையில் உள்ளது.

தற்பொழுது சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் 12 திட்டப்பணிகள் ரூ.110.19 கோடி மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூபாய் : கோடியில்)
	பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையம்	
1	பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி. ஆர் பேரூந்து நிலையத்தில் நான்கு சக்கர வாகன நிறுத்தம் அமைத்தல்	11.75
2	பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையத்தில் பேரூந்து போக்குவரத்து வழித்தடங்கள் மேம்படுத்தும் பணிகள் செய்தல்	14.27
3	பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையத்தினை மேம்படுத்தும் பணிகள் செய்தல்	13.20
4	பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையம் கூடுதல் கட்டிடம் மேம்படுத்தும் பணி	11.50
	பாளைபேரூந்து நிலையம்	
5	பாளைபேரூந்து நிலையம் மேம்படுத்தும் பணி	13.08
	அறிவியல் பூங்கா	
6	பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையம் அருகில் அறிவியல் பூங்கா அமைத்தல்	4.94

7	பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையம் அருகில் அறிவியல் பூங்கா கூடுதல் வசதிகள் அமைத்தல்	5.60
8	பசுமை வளாகங்கள் சிப்பம் 3 (7 எண்ணம் பூங்கா) மேம்படுத்துதல்	12.31
	வாகனம் மற்றும் எல்.இ,டி விளக்குகள்	
9	திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை அமைப்பின் கீழ் தெரு துடைக்கும் இயந்திரம் மற்றும் கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் கொள்முதல் செய்தல்	3.95
10	மாநகராட்சி பகுதிகளில் கூடுதல் எல்.இ,டி விளக்குகள் மற்றும் உயர் கோபுர மின் விளக்குகள் அமைத்தல் பகுதி 1	10.00
11	த.மு சாலையில் இரு சக்கர வாகன நிறுத்தம் அமைத்தல்	6.75
12	வார்டு எண்.27 என்.ஜி.ஒ. காலனி பகுதியில் மிதிவண்டிகள் செல்ல ஏதுவாக பாதை அமைத்தல்	2.84
மொத்தம்		**110.19**

மேற்கண்ட பணிகள் யாவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 08.12.2021 அன்று காணொளி வாயிலாக திறந்து வைக்கப்பட உள்ளது.